THIRU B. VENKATASWAMY: Most of the ladies in the house are doing this handicraft work. May I know from the Hon. Minister whether this handicraft will be given more prominence and whether he will see that more handicraft goods are produced and sold through the Handicrafts Development Corporation?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: There is a proposal to start Poompuhar Sales Emporium in Krishnagiri also. So, my friend will be satisfied with this answer.

*Work study of Housing Board*

* 293 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether a study on the staff position and the nature of work done by the State Housing Board has been undertaken by the Finance Department; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பணி ஆய்வை நிதித் துறையின் அமைப்பு-நடைமுறைப் பிரிவு 5—8—1974 ஆம் நாளிலிருந்து மேற்கொண்டுள்ளது. அது பொறியியல் பிரிவைப் பற்றிய தன் அறிக்கையை முடித்துள்ளது. நிர்வாகம், கணக்கு பிரிவுகளுக்கான அதன் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** இதுவரை ஆய்வு செய்யப் பட்டதில் என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது? மேலும் இருக்கக்கூடிய குறைபாடுகளைப் போக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அவர்கள் ஆய்வு செய்து கொடுத்த அறிக்கையின்பேரில் ஒவ்வொரு பத்து நாளைக்கும் ஒவ்வொரு பொறியாளர் சென்று எவ்வளவு தூரம் வேலை செய்கிறார்கள் என்ற கணக்கெல்லாம் பார்க்கப்பட்டு வருகிறது. அவர்கள் செய்த ஆய்வு எல்லாம் ஒப்புக்கொண்டு பொறியாளர்களுக்கு அறிவிக்கப்பட்டு நல்ல அளவில் வேலை நடந்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1975 மார்ச் 12

**திரு. எம். சுரேந்திரன்:** வீட்டு வசதி வாரியத்திலே கணக்குகள், வரவு-செலவுகள், அட்வான்சுகள், டெபாசிட்டுகள், வாடகைகள் போன்றவற்றுக்கு முறையாக கணக்குகள் இல்லை என்றும், அது சம்பந்தமாக ஆராய ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு அந்தக் கமிட்டி ஆராய்ந்து அந்த ரிப்போர்ட் தரப்பட்டிருக்கிறதா? அம்மாதிரி ஆராயப்பட்ட பிறகு எல்லாம் முறைப்படுத்தப் பட்டிருக்கிறதா? இப்போதும் முறையாக நடைபெறவில்லை என்ற புகார் இருப்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ஏற்கனவே சொன்னது போல் நிர்வாகக் கணக்குப் பிரிவுகளுக்கான அறிக்கை எதிர் பார்க்கப்படுகிறது. கணக்குப் பிரிவைச் சரிப்படுத்தும் ஏற்பாடு களை மேற்கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** வீட்டு வசதி வாரியத்திற்குப் பணியா ளர்களை நியமிப்பதற்கு ஏதாவது விதிமுறைகள் இருக்கின்றனவா? பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலம் நியமனமாகிறதா அல்லது எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சு மூலம் நியமனம் ஆகிறதா? மாவட்டங்களில் வீட்டு வசதி வாரியத்தை விஸ்தரிக்கும்போது சென்னையிலே நியமித்து ஆங்காங்கு அனுப்பக்கூடிய முறை தற்போது இருந்து வருகிறது. இதனால் அந்தந்த மாவட்டங் களில் இருக்கக்கூடிய மக்களுக்கு உரிய விகிதாசாரம் கிடைக்க வில்லை. இந்தக் குறைபாடுகளை நீக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** வீட்டு வசதி வாரியத்தில் ஏற்கனவே ஏராளமான பேர் வேலையில் சேர்ந்து விட்டிருந் தார்கள். ஆகவே, புதிதாக மாவட்டங்களில் ஏற்படும் அலுவலகங் களுக்கு ஏற்கனவே வேலையில் இருப்பவர்கள் அனுப்பப் படுகிறார்கள். புதிதாக எடுக்கும்போது எம்ப்ளாய்மென்ட் எக்ஸ் சேஞ்சு மூலந்தான் எடுக்கிறார்கள். கடந்த ஓராண்டுக் காலமாக புதிதாக வேலைக்கு ஆட்களை எடுக்கக்கூடிய அளவுக்கு அந்த நிறுவனம் இல்லை.